## பழவகை அபிவிருத்திச் சபை- 2013

பழவகை அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஈ/பீஎப் 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்படுதன்மை

2001 ஆம் ஆண்டின் பின்னர் சபையின் நடவடிக்கைகள் செயற்பாடற்று இருந்ததுடன், அதற்குரிய பதவியணியினரும் கட்டுப்பாட்டு சபையும் இருக்கவில்லை. மேலும், சபையின் கலைப்பு நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு 2012 திசெம்பர் 05 ஆந் திகதி கூடிய பொது முயற்சிகள் குழு கட்டளையிட்டிருந்த போதிலும் அமைச்சு, சபையின் கலைப்பு நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல்

மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் என்பன பராமரிக்கப்பட்டிருந்தமைக்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

சபையினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2001 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | பெறுமதி | பொறுப்புக்கள் | பெறுமதி |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| நிலையான வைப்புக்கள் | 5,480,400 | செலுத்த வேண்டிய வங்கி வட்டிக்கான வரி | 73,654 |
| கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி | 736,545 | அட்டுறு செலவினம் | 500 |
| வங்கி மீதி | 975,449 | | |

அரசாங்க வங்கியொன்றில் 03 நிலையான வைப்புக்களில் ரூபா. 5,552,400 தொகையொன்று சபையினால் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்

திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கணக்குகளின் மீதி ரூபா 6,569,743 ஆக இருந்தது. சபை ஏனைய அரசாங்க வங்கியில் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 7,094,706 தொகையான மீதி காணப்பட்டது. இது தவிர மேற்கூறப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.